பக்கங்கள் 16

# மாலை முரசு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 கார்த்திகை 17 திங்கட்கிழமை 04.12.2023 அதிர்வு 126

## மின்னல் தாக்கி விவசாயி சாவு!

வயலில் உழுது கொண்டிருந்தபோது விவசாயி ஒருவர் மின்னல் தாக்கி உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் கலேவெல பிரதேசத்தில் இன்று இடம்பெற்றுள்ளது என்று கலேவெல பொலிஸார் தெரிவித்துள்ளனர். 04▸

# ராஜபக்ஷ திருட்டுக் குடும்பத்துக்கு உரிய தண்டனை கிடைத்தே தீரும்!

### மக்கள் சந்திப்பில் சஜித் திட்டவட்டம்



"எனது உயிரைப் பறித்தாலும் ராஜபக்ஷ திருட்டுக் குடும்பத்தை சட்டத்தின் முன் நிறுத்துவதை யாராலும் தடுக்க முடியாது. இந்தத் திருட்டுக் குடும்பத்துக்கு உரிய தண்டனை கிடைத்தே தீரும்."

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

மினுவாங்கொடை நகரில் நேற்று பிற்பகல் இடம்பெற்ற மினுவாங்கொட ஜனபவுர மக்கள் பிரதிநிதிகள் சந்திப்பில் கலந்துகொண்டு 04▸

## கணவனைக் கத்தியால் குத்திக் கொன்ற மனைவி

இரும்புக் கம்பியால் தாக்கிய கணவரிடம் இருந்து தப்பிக்க முற்பட்ட மனைவி, கணவரின் கண்களில் மிளகாய் பொடியைத் தூவி கழுத்தில் கத்தியால் குத்திக் கொலை செய்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளார். 04▸



### யாழ். பல்கலை நினைவுத் தூபி விவகாரம்:

## இன்று மீண்டும் விசாரணைக்கு சென்றுள்ள மாணவர் ஒன்றியம்




(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தினுள் அமைக்கப்பட்டுள்ள முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி தொடர்பில் இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய 04▸

## குடும்பஸ்தர் ஒருவர் பாம்பு தீண்டி மரணம்

(மட்டக்களப்பு நிருபர்)



மட்டக்களப்பு, கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஒல்லிக்குளம் பகுதியில் குடும்பஸ்தர் ஒருவர் பாம்பு தீண்டி உயிரிழந்துள்ளார்.

பிள்ளையார் கோயில் வீதி, பட்டிப்பளை பிரதேசத்தைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் 04▸

### பிரதான சாட்சி சமூகமளிக்காததால்

## அடையாள அணிவகுப்பு 8ஆம் திகதிக்கு மாற்றம்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் - வட்டுக்கோட்டைப் பொலிஸ் நிலையத்தில் நாகராசா அலெக்ஸ் என்ற இளைஞர் பொலிஸாரின் சித்திரவதைக்கு உள்ளாகி உயிரிழந்தமை 04▸




## யாழில் டெங்கு ஒழிப்புக் கடமைகளில் இருந்து டெங்குத் தடுப்பு உதவியாளர்கள் திடீர் விலகல்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் பல்வேறுகோரிக்கைகளைமுன்வைத்து டெங்கு ஒழிப்புக் கடமைகளில் இருந்து டெங்குத் தடுப்பு உதவியாளர்கள் விலகியுள்ளனர்.

தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜரை யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் அவர்கள் இன்று கையளித்துள்ளனர்.

நிரந்தர நியமனம் மற்றும் நிலுவைக் கொடுப்பனவு வழங்கப்படாமை உள்ளிட்ட பல்வேறு தொழில்சார் சிக்கல்களுக்குத் தீர்வு 04▸







# சுகநல மேம்பாட்டு நடைபவனி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விளையாட்டு விஞ்ஞான அலகு ஆரம்பிக்கப்பட்டு 25 ஆண்டுகளை நிறைவு செய்வதை முன்னிட்டு அதன் வெள்ளி விழாக் கொண்டாட்டங்களில் ஒரு நிகழ்வாக சுகநல மேம்பாட்டு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலான நடை பவனி நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இணைந்த சுகநல விஞ்ஞானங்கள் பீடத்தின் பீடாதிபதி திருமதி தெய்வி தபோதரன், விளையாட்டு விஞ்ஞான அலகின் தலைவர் கலாநிதி சி. சபாஆனந்த் மற்றும் விரிவுரையாளர்கள் கூட்டாகக் கொடியசைத்து இந்த நடை பவனியை ஆரம்பித்து வைத்தனர்.

இது பிறவுண் வீதி, இராமநாதன் வீதி, கே.கே.எஸ் வீதி, வைத்தியசாலை வீதி, பலாலி வீதி ஊடாகச் சென்று பல்கலைக்கழகத்தின் பிரதான வளாக முன்றலை அடைந்தது. அங்கிருந்து நகர்ந்த நடை பவனி பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் நிறைவடைந்தது.

இந்த நிகழ்வில் விளையாட்டு விஞ்ஞான அலகின் பழைய மாணவர்கள், விரிவுரையாளர்கள், போதனாசிரியர்கள், பணியாளர்கள், மாணவர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

# திம்புலாகலை நவமில்லன வயல்களில் யானைகளால் 750 ஏக்கர் பயிர் நாசம்!

திம்புலாகலை நவமில்லன வயல் பகுதிக்குள் நேற்று புகுந்த எட்டு காட்டு யானைகள் சுமார் 750 ஏக்கர் பயிர்களை மிதித்து நாசம் செய்துள்ளன என்று நவமில்லன விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகள் தெரிவிக்கின்றனர்.

சோமாவதி மற்றும் மதுருஓயா தேசிய பூங்காக்கள் மற்றும் திம்புலாகலை மலையை சுற்றியுள்ள காப்புக் காடுகளில் இருந்து சுமார் 15 காட்டு யானைகள் கூட்டமாக இருப்பதாக விவசாயிகள் அமைப்பின் தலைவர் அமில சர்மிந்த விஜேரத்ன தெரிவித்தார்.

கிராமம் மற்றும் நெற்பயிர்களுக்குள் புகுந்த காட்டு யானைக் கூட்டம், கிராமத்தில் உள்ள சுமார் இரண்டரை ஏக்கர் வாழைத் தோட்டத்தையும், சுமார் 40 தென்னை மரங்களையும் சேதப்படுத்தியுள்ளன என்று விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் வனஜீவராசி அதிகாரிகளுக்கு அறிவித்தும் எரிபொருள் இல்லை எனக்கூறி காட்டு யானைகளை விரட்ட வருவதில்லை என்று திம்புலாகல நவ மில்லன விவசாயிகள் அமைப்பின்



தலைவர்களும், விவசாய அமைப்புக்களின் பிரதிநிதிகளும் சுட்டிக்காட்டுகின்றனர்.

இந்த நிலையில், இரவு பகலாக திம்புலாகலை மலையில் சுற்றித் திரியும் இந்தக் காட்டு யானைக் கூட்டத்தால் தங்களது பிள்ளைகள் உயிருக்கும், தங்களுடைய உயிருக்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கின்றனர்.

தம்மிடம் உள்ள வளையல் , காதணி போன்றவற்றை விற்று பயிர் செய்தால், இவ்வாறு யானைகள் அழித்து சாப்பிட்டால் மீண்டும் அவற்றைத் தயார்ப் படுத்தும் பொருளாதார நிலை இல்லை என்று கவலை தெரிவிக்கின்றனர்.

யானைகளிடம் இருந்து தமது கிராமத்தையும் வயல்களையும் பாதுகாக்கும் நோக்கில் திம்புலாகல நவமில்லன பிரதேசத்தில் தாம் அமைத்திருந்த மின்வேலியையும் நவமில்லனை விவசாயிகள் அழித்துள்ளனர்.

இந்த நிலையைக் கருத்தில் கொண்டு விவசாயிகள் வனவிலங்கு அதிகாரிகளின் கவனத்தை கோரியுள்ளனர். மேலும், திம்புலாகலை மலையை சூழவுள்ள காப்புக்காடு பகுதியில் யானைகள் கூட்டம் அலை மோதுவது டன், அந்தப் பகுதியில் யானை-மனித மோதலை குறைப்பதற்குச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# கொழும்பு மற்றும் மும்பை இடையே தினசரி இரட்டை விமான சேவைகள்!

ஸ்ரீ லங்கன் ஏர்லைன்ஸ் கொழும்பு மற்றும் மும்பை இடையே தினசரி இரட்டை விமான சேவையை அறிமுகப் படுத்தியுள்ளது.

இது இந்தியாவின் நிதி மற்றும் பொழுதுபோக்கு மூலதனத்துக்குச் செல்லும் பயணிகளின் வசதியைப் பெருக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் ஸ்ரீ லங்கன் ஏர் லைன்ஸ் தெரிவித்துள்ளதாவது,

மும்பைக்கான புதிய இரட்டை தினசரி சேவையானது, அதன் மும்பை வழித்தடத்தில் இலங்கையர்களின் திறனை 50 சதவிகிதம் உயர்த்துவதாக காணப்படுகின்றது.

அது மட்டுமல்லாமல், இந்தியாவில் ஏற்கனவே உள்ள விமான சேவையின் பரந்த வலையமைப்பை வலுப்படுத்தும் என்றும் கூறியுள்ளது.

# அராலி – பொன்னாலைக்கு இடைப்பட்டுள்ள 354 ஏக்கர் காணியை அரசு சுவீகரிக்கத் திட்டம்

**உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்கிறார் நாடாளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தன்**

அராலி தொடக்கம் பொன்னாலைக்கு இடைப்பட்ட பகுதியில் சுமார் 354 ஏக்கர் காணியை அரசு சுவீகரிக்கத் திட்டமிட்டுள்ளது. இது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் நாடாளுமன்றில் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் நாடாளுமன்றில் தெரிவித்துள்ளவை வருமாறு–

சங்கானைப் பிரதேச செயலகத்தில் அராலி தொடக்கம் பொன்னாலைவரை, ஏறக்குறைய பத்து கிலோமீற்றர். அங்கு என்ன நடக்கின்றது என்றால், வன ஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம், அவர்கள் வன ஜீவராசிகள் என்பதை விட்டு வன வளங்கள் பாதுகாப்பு என்று அந்த இடங்களுக்கு ஏற்றவாறு பெயர்களை மாற்றி அதனை தமது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவரப் பார்க்கின்றார்கள்.

ஏறக்குறைய 354 ஏக்கர். 07



மயானங்கள், விளையாட்டுத் திடல்கள், தனியார் காணிகள் எல்லாமே அதற்குள் அடங்குகின்றன. இதுபற்றி அரச அதிபர் சங்கானை பிரதேச செயலாளரைக் கேட்டிருக்கின்றார். பொதுமக்களையும் பொது அமைப்புக்களையும் அழைத்து இது சம்பந்தமான அவர்களுடைய அபிப்பிராயங்களை எடுக்கும்படி கூறியுள்ளார். அங்கு சென்ற எல்லோருமே அதை செய்யக்கூடாது என்றே கூறியிருக்கின்றனர்.

ஏனென்றால் பின்பு அப்பகுதி கடலில் மீன்பிடிக்கச் செல்பவர்கள் அங்கு செல்ல முடியாமல் போகும், அந்த மயானங்களை பாவிக்க முடியாமல் போகும் ஏனென்றால் வன வளங்கள் பாதுகாப்பு என்று அவர்கள் விடமாட்டார்கள்.

இது மாத்திரமல்ல, ஜனாதிபதி அவர்கள் சொல்லியிருக்கிறார், அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், 85 ஆம் அண்டுக்கு முந்திய நிலைமைக்குத்தான் கொண்டுசெல்லப் போகின்றோம் என்று. ஆனாலும் அங்கு இந்த விடயம் நடந்து கொண்டிருக்கிறது. அவற்றை வனஜீவராசிகள் பாதுகாப்பு வலயமாக எடுப்பதற்கான முயற்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன. நிச்சயமாக இவை எல்லாம் நிறுத்தப்படப்பட வேண்டும். தமிழ் மக்களைப் பொறுத்தமட்டில் நம்பிக்கையை உருவாக்க வேண்டியது உங்களுடைய கடமை. எனவே அதை கட்டாயமாக செய்ய வேண்டுமென்று கேட்டு கொள்ளுகின்றேன்.–என்றார்.

# சட்ட விரோதமாக மாணிக்க கற்கள் அகழ்வில் ஈடுபட்ட நால்வர் கைது!

**(மஸ்கெலியா நிருபர்)**

நோர்வூட் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட போற்றி தோட்டத்திலுள்ள கள அதிகாரியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இரத்தினக்கல் தோண்டிக்கொண்டிருந்த கள அதிகாரி உட்பட நான்கு சந்தேக நபர்களை மஸ்கெலியா பொலிஸ் விசேட அதிரடிப்படை அதிகாரிகள் மற்றும் நோர்வூட் பொலிஸ் அதிகாரிகள் இணைந்து கைது செய்துள்ளனர்.

தோட்டத்திலிருந்து காசல்ரீ நீர்த்தேக்கத்துக்கு நீர் செல்லும் கால்வாய்க்கு அருகில் கள அலுவலரின் உத்தியோகபூர்வ இல்லம் அமைந்துள்ளது. அந்த உத்தியோகபூர்வ இல்லத்தின் படுக்கையறையில் 30 அடி ஆழமான பள்ளம் தோண்டப்பட்டுக் குழியில் இருந்த வண்டல் மண் எடுக்கப்பட்டுள்ளது. உத்தியோகபூர்வ இல்லத்தினுள் நீண்ட நாள்களாக மண் அள்ளப்பட்டு இருப்பதாக சந்தேக நபர்களை கைது செய்த பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட நான்கு சந்தேக நபர்களும் பலாங்கொடை, பொகவந்தலாவ மற்றும் நோர்வூட் பிரதேசங்களை சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# விளையாட்டு உபகரணம் வழங்கல்

**(நூருல் ஹுதா உமர் )**

மருதமுனை மனாரியன் 88 அமைப்பின் ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்களின் கீழ் “மருதமுனை இளைஞர் விளையாட்டு கழகங்களுக்கு உதவுவோம்” எனும் செயற்திட்டத்தின் கீழ் அல் ஹாஜ் கலீல் முஸ்தபாவால் மருதமுனையிலுள்ள விளையாட்டு கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வு மனாரியன் 88 அமைப்பின் பிரதான செயற்பாட்டாளர் ஐ.எல். முக்தாரால் முன்னெடுக்கப்படுகின்றன.

மருதமுனையில் காணப்படும் சுமார் 33 இளைஞர் விளையாட்டு கழகங்களுக்கும் வருடாந்தம் உதவிகளை தொடர்ந்து வழங்கும் செயற்றிட்டத்தின் கீழ் இதுவரைக்கும் 11 கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டன.



இந்த குறிப்பிட்ட செயற்றிட்டம் தொடர்பாக மருதமுனை ஈஸ்ட்டன் யூத் விளையாட்டு கழகத்தினருக்கும், பர்வின் ரெடிங், லதான் அக்ரோ இன்டர்நேஷனல் ஆகிய நிறுவனங்களின் நிறைவேற்றுப் பணிப்பாளர் அல்–ஹாஜ் கலீல் முஸ்தபாவுக்கும் இடையிலான கலந்துரையாடல் மருதமுனை பிரதான வீதி முஸ்தபா கட்டடத் தொகுதியில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் மருதமுனை ஈஸ்ட்டன் யூத் விளையாட்டு கழகம் எதிர்நோக்கும் பிரச்சினைகள், சவால்கள் மற்றும் கழக கட்டமைப்பு, முன்னேற்றம் மற்றும் எதிர்கால உதவிகள் போன்ற விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது. விளையாட்டு உபகரணங்களும் வழங்கப்பட்டன.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**மின்னல் தாக்கி...**

புலாகல பிரதேசத்தைச் சேர்ந்த எம். ஏ. சோமதிலக என்ற 60 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையே இதன்போது சாவடைந்துள்ளார்.

அவர் தனது குடும்பத்தினருடன் வயலில் உழுது கொண்டிருந்தபோது மின்னல் தாக்கியதில் தொலைதூரம் தூக்கி வீசப்பட்டார் என்று விசாரணையில் தெரியவந்துள்ளது.

அவர் கலேவெல வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும்போதே உயிரிழந்துவிட்டார் என்று பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

**அடையாள...**

தொடர்பான வழக்கில் இன்று 30 இற்கும் மேற்பட்ட பொலிஸார் அடையாள அணிவகுப்புக்காக யாழ். நீதிவான் நீதிமன்றத்துக்குச் சமூகமளித்திருந்தனர்.

எனினும், பிரதான சாட்சியான அலெக்ஸுடன் கைது செய்யப்பட்டுப் பிணையில் விடுவிக்கப்பட்ட இளைஞர் நீதிமன்றத்துக்குச் சமூகமளிக்காத காரணத்தால் அடையாள அணிவகுப்பு எதிர்வரும் 8ஆம் திகதிக்கு மாற்றப்பட்டுள்ளது.

அத்தோடு தொடர் மரண விசாரணை நாளை நீதிமன்றில் இடம்பெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அலெக்ஸ் படுகொலை வழக்கில் வட்டுக்கோட்டைப் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த 4 பொலிஸார் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

**குடும்பஸ்தர் ஒருவர்...**

தந்தையான தவராசா திலகராஸ் (வயது 39) என்பவரே நேற்று இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

தனது பிள்ளையின் பிறந்தநாளுக்காக உணவுப்பொருட்கள் வாங்கிக்கொண்டு வீடு திரும்பிக் கொண்டிருந்தபோது வீதியின் அருகில் நின்ற பாம்பு தீண்டியதில் அவர் மயக்கமுற்ற நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். எனினும், அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

கொக்கட்டிச்சோலை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் வேண்டுகோளுக்கமைவாக சம்பவ இடத்துக்குச் சென்ற மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி தம்பிப்பிள்ளை தவக்குமார், சடலத்தைப் பார்வையிட்ட பின்னர் உடற்கூற்று பரிசோதனைக்காக சட்ட வைத்திய அதிகாரிக்குப் பரிந்துரைத்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை கொக்கட்டிச்சோலைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

**யாழில் டெங்கு...**

வழங்கப்பட வேண்டும் எனக் கோரி அவர்கள் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

தற்போதைய காலப் பகுதியில் டெங்குத் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

**இன்று மீண்டும்...**

சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவில் இன்று மீண்டும் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

பல்கலைக்கழகத்தினுள் அனுமதி பெறப்படாமல், முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி அமைக்கப்பட்டுள்ளமை தொடர்பிலும், தூபி அமைப்புக்கான நிதி கையாளுகை தொடர்பிலும் பல்கலைக்கழகப் பேராசிரியர் ஒருவர் உட்பட மூன்று பேரால் முறைப்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

இந்த முறைப்பாடுகள் தொடர்பிலான விசாரணைகளை இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு முன்னெடுத்துள்ளது.

தூபி அமைப்பதற்காகப் பல்கலைக்கழக மாணவர்களால் நிதி சேகரிக்கப்பட்டது என்பதை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான ஆவணங்களுடன், அதனை உறுதிப்படுத்துவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரிகளையும், மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகளையும் இன்று விசாரணைகளுக்குச் சமூகமளிக்குமாறு ஆணைக்குழு அழைப்பு விடுத்திருந்தது.

இந்நிலையில், பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் சிரேஷ்ட பொருளாளரும், பல்கலைக்கழக மாணவர் ஒழுக்காற்று உத்தியோகத்தர் ஒருவரும், தூபி அமைக்கப்பட்ட வேளையில் இருந்த மாணவர் ஒன்றியத் தலைவரும் இன்று பிற்பகல் 1.00 மணியளவில் இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவில் இடம்பெறவுள்ள விசாரணைகளுக்காகச் சென்றுள்ளனர்.

**கணவனைக் கத்தியால்...**

இந்தச் சம்பவம் வெல்லவ பிரதேசத்தில் நேற்று இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் உயிரிழந்தவர் தல்விட பிரதேசத்தைச் சேர்ந்த 38 வயதுடைய எஸ். பிரதீப் குமார எனவும், சம்பவத்தில் கைது செய்யப்பட்டவர் 36 வயதுடைய ஆடை தொழிற்சாலை பெண் ஊழியர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கணவர், மனைவி இருவருக்கும் இடையில் ஏற்பட்ட வாக்குவாதம் எல்லை மீறியதால் உயிரிழந்த நபர் தனது மனைவியை இரும்புக் கம்பியால் தாக்கிக் காயப்படுத்தியுள்ளார் எனவும், இதையடுத்து மனைவி மேற்கொண்ட பதில் தாக்குதலில் கணவன் உயிரிழந்துள்ளார் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வெல்லவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

**ராஜபக்ஷ...**

உரையாற்றும்போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"சில தலைவர்கள் கோப்புகளைத் தூக்கிக் கொண்டு கூட்டங்களுக்கு வந்து ஊழல் பேரங்கள் குறித்து பேசி ஆட்சிக்கு வந்ததும் தண்டிப்போம் என்று கூறினாலும், ஐக்கிய மக்கள் சக்தி எதிர்க்கட்சியாக இந்நாட்டை வங்குரோத் தாக்கிய ராஜபக்ஷ குடும்பத்தை நீதிமன்றத்திற்குக் கொண்டு வந்தது நாட்டை வங்குரோத்தாக்கியதன் மூலம் அடிப்படை உரிமைகளை மீறினார்கள் என்ற தீர்ப்பைப் பெற நடவடிக்கை எடுத்தது.

இவை அனைத்தும் நாம் ஆட்சிக்கு வருவதற்கு முன்பு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள். ஐக்கிய மக்கள் சக்தி கோப்புகளை காட்டி பொய்யான நடவடிக்கைகளை நடத்துவதில்லை. ஊழலுக்கு எதிராக முன்னிற்கின்றோம் என்று கூறும் சில தரப்பின் பொய்யை நம்பி ஏமாற வேண்டாம்.

உண்மையாகவும் தூய்மையாகவும் ஐக்கிய மக்கள் சக்தியானது திருடர்களுடன் எந்த டீல்களையும் மேற்கொள்ளவில்லை. ஐக்கிய மக்கள் சக்தி திருடர்களைப் பிடிக்கும் வேலையை ஆரம்பித்துள்ளது.

உயர் நீதிமன்றத் தீர்ப்பின் மூலம் நாட்டையே வங்குரோத்தாக்கியவர்களை வெளிக்கொணர முடிந்தது. தற்போது கிராமம், நகரம் என அனைத்து பகுதிகளிலும் பொதுமக்களிடம் கையெழுத்துத் திரட்டும் பணி நடந்து வருகின்றது.

இந்த மனுவின் மூலம் நாட்டை வங்குரோத்தாக்கிய 220 இலட்சம் மக்களின் அடிப்படை உரிமைகளை மீறிய அனைவருக்கும் எதிராக ஜனாதிபதி ஆணைக்குழு நியமிக்கப்பட்டு குடியுரிமைகளை இல்லாதொழிக்கும் பொறுப்பை ஐக்கிய மக்கள் சக்தி பொறுப்பெடுத்துள்ளது.

இந்த வழக்கின் தீர்ப்பு குறித்து நாடாளுமன்றத்தில் கருத்துரைக்கும் போது குடும்ப ஆட்சிக்கு ஆதரவாக இருந்தவர்கள் பல்வேறு தடங்களை ஏற்படுத்தி நாம் கையில் வைத்திருந்த பத்திரங்களைக் கூடப் பறித்தெடுத்தனர். எனது உயிரைப் பறித்தாலும் இந்தத் திருட்டுக் குடும்பத்தை சட்டத்தின் முன் நிறுத்துவதை யாராலும் தடுக்க முடியாது. இந்தத் திருட்டுக் குடும்பத்துக்கு உரிய தண்டனை கிடைத்தே தீரும்." - என்றார்.





# கொழும்பில் கொண்டாடப்பட்டது டுபாயின் 52 ஆவது தேசிய தினம்!

(அஷ்ரப் ஏ சமத்)

டுபாய் நாட்டின் 52 ஆவது தேசிய தினத்தை முன்னிட்டுக் கொழும்பில் உள்ள தூதரகம் காலிமுகத்திடலில் நிகழ்வைக் கொண்டாடியது.

இந்த நிகழ்வு ஐக்கிய அரபு எமிரேட்ஸின் தூதர் காலித் நசார் அல் அமிரி தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம அதிதியாக தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் மனுச நானயக்கார கலந்து கொண்டார். அத்துடன் வெளிநாட்டு அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்றி, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உட்பட அமைச்சர்கள், கட்சித் தலைவர்கள் மற்றும் வெளிநாட்டுத் தூதர்கள், கொழும்பில் வாழும் டுபாய் நாட்டவர்கள் கலந்து கொண்டனர்.



# பங்காரு அடிகளார் நினைவு நிகழ்வு

(ந. ஹரன்)

மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி அருத்திரு பங்காரு அடிகளார் இறை சமாதி நிலையடைந்த 45 ஆவது நாளை முன்னிட்டுப் பக்தி நிகழ்வுகள் இடம்பெற்றன.

யாழ்ப்பாணம் சுன்னாகம் பகுதியில் அமைந்துள்ள மேல்மருவத்தூர் அம்மன் ஆலய நிர்வாகத்தினர் தலைமையில் மேல்மருவத்தூர் அருள்மிகு ஆதிபராசக்தி சித்தர் பீடம் அதன் அறப் பணிகளில் ஒன்றான கல்வி சமூக நலன் பண்பாடு அறப்பணி மையத்தின் ஏற்பாட்டில் கல்வியங்காடு முத்தம்பி விநாயகர் ஆலயத்தில் பக்தி பூசை நிகழ்வுகள் இடம் பெற்றன.



இந்த நிகழ்வில் பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள், தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு உலர் உணவு பொதிகள் என்பன வழங்கப்பட்டன.







# ஆசிரியர் சேவைக்கால நினைவுத் தொகுப்பு வெளியீடு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

எனசல்கொல்ல மத்திய கல்லூரியின் பழைய மாணவரும் தெல்தோட்டை விஞ்ஞான செயல் திட்டத்தின் தலைவரும் , கண்டி கல்வி வலயத்தின் ஆசிரிய ஆலோசகருமான மௌலவி ஐ .எம். நிஸாம் எழுதிய ஆசிரியர் சேவைக்கால நினைவுத் தொகுப்பு நூல் வெளியீட்டு நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

பிரதேச பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் பழைய மாணவர்கள், பாடசாலை மாணவத் தலைவர்கள், நலன் விரும்பிகள் நிகழ்வில் கலந்து கொண்டனர்.




# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## பொருளாதார நிலை பற்றிய பார்வை

இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநரும், பெரிதும் மதிக்கப்படும் பொருளாதார நிபுணருமான கலாநிதி இந்திரஜித் குமாரசுவாமி இலங்கையின் பொருளாதார நிலைமை குறித்துத் தெரிவித்துள்ள அவதானிப்புக் கருத்துக்கள் நோக்கற்பாலவை.

பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்ட நாடு கடந்த 18 மாதங்களாகச் சிறப்பாக செயல்பட்டு, தன் நிலையை மேம்படுத்தியிருக்கின்றது என்று முழுத் திருப்தி தெரிவித்திருக்கின்றார் அவர்.

நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி கடந்த வருடத்தில் -10 வீதம் என்ற மோசமான வீழ்ச்சி நிலையைக் காட்டியது. அதிலிருந்து மீண்டு, இப்போது இந்த வருடத்தின் மூன்றாவது காலாண்டில் வளர்ச்சிப் போக்கை நோக்கி நாடு நகருகின்றது. இந்த ஆண்டின் இப்போதைய கடைசிக் காலாண்டில் இது குறிப்பிடத்தக்க வளர்ச்சி வீதத்தை எட்டும் என்று இலங்கை மத்திய வங்கி நம்பிக்கையுடன் எதிர்பார்க்கும் நிலைமை எட்டப்பட்டு இருப்பதாக அவர் தெரிவித்திருக்கின்றார்.

கடந்த ஆண்டு செப்டெம்பரில் பணவீக்கம் எழுபது வீதத்தை எட்டி இருந்தது. அது இப்போது 1.5 வீதமாகக் குறைக்கப்பட்டிருக்கின்றமை பெரிய சாதனை. இதற்காக இப்போதைய மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க மெச்சப்பட வேண்டியவர் என்று புகழாரம் சூட்டியிருக்கின்றார் இந்திரஜித் குமாரசுவாமி.

''நான் மத்திய வங்கி ஆளுநராக இருந்தபோது அவர் - நந்தலால் வீரசிங்க - பிரதி ஆளுநராகப் பணியாற்றினார். மத்திய வங்கியில் அதிக அறிவு பூர்வமான அவரிலேயே பல விடயங்களுக்கு நான் தங்கியிருந்தேன்'' - என்று தமது மதிப்பைத் தெரிவித்திருக்கின்றார் குமாரசுவாமி.

அதீத பணவீக்கத்துக்கு காரணமான விடயங்களை இப்போதைய மத்திய வங்கி ஆளுநர் நேரடியாக எதிர்கொண்டு அவற்றுடன் மோதினார். கடுமையான நடவடிக்கைகளை சரியான முறையில் எடுத்தார். அதனால் பணவீக்கம் யாரும் நம்ப முடியாத அளவுக்கு 1.5 வீதமாக வீழ்ந்தது. சர்வதேச நாணய நிதியத்தினால் கூட இத்தகைய வீழ்ச்சியை எதிர்பார்த்திருக்க முடியாது என்று இந்திரஜித் குமாரசுவாமி கூறுகிறார்.

இதற்கு அப்பால் அவர் கூறுகின்ற கருத்துக்கள் தான் கூர்ந்து நோக்கப்பட வேண்டியவை.

''வழக்கமாக இலங்கை சர்வதேச நாணய நிதியத்தின் திட்டங்களைச் சரியாக - முறையாக - ஆரம்பிக்கும். நாங்கள் மருந்தை சரியாக உள்ளெடுப்போம். ஒரு நிலைமை வரை பொருளாதாரத்தைச் சரியாக நிலை நிறுத்துவோம். ஆனால் தேர்தல் நெருங்கியதும் இந்த ஒழுக்கம் குறைந்து காணாமல் போய் விடும்''- என்று அவர் உண்மையை வெளிப்படுத்துகின்றார்.

''ஆனால், அதற்காக நான் தேர்தல்களைத் தள்ளிப் போடுங்கள் என்று கூறவில்லை. அதைப் புரிந்து கொள்ளுங்கள். எந்த வகையிலும் அரசமைப்பை மீறும் விதத்தில் தேர்தலை நடத்தாமல் இருங்கள் என்று நான் கூற வரவில்லை. நாங்கள் இன்னும் கொஞ்சம் சிறப்பாக நடந்து கொள்ள வேண்டும். எங்கள் அரசியல்வாதிகள் சிறப்பாக நடந்து கொள்ள வேண்டும். மக்களாகிய நாம் எல்லோரும் சிறப்பாக நடந்து கொள்ள வேண்டும்'' - என்று முன்னெச்சரிக்கை விடுத்திருக்கின்றார் முன்னாள் மத்திய வங்கி ஆளுநர்.

எதிர்கொள்ளும் தேர்தல்களில் வெற்றி பெறுவதற்காக நாட்டின் பொருளாதாரத்தைப் பற்றிச் சிந்திக்காமல் கண்மூடித்தனமான முடிவுகளை அரசியல்வாதிகள் எடுக்கின்றமைதான் இந்தக் குழப்பங்கள் யாவற்றிற்கும் காரணம் என்பதை மேலோட்டமாக வெளிப்படுத்துகிறார் முன்னாள் ஆளுநர்.

அதைத்தான் ராஜபக்ஷக்கள் செய்தார்கள். நாட்டைச் சீரழித்தார்கள்.

இப்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் அதற்குத்தான் தயாராகின்றார் என்பது வெளிப்படையானது. அவர் தற்போது சமர்ப்பித்துள்ள அடுத்த ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் அடுத்த ஆண்டில் தேர்தல்கள் நெருங்கும் போது அரசியல் ஆதாயங்களுக்காக நாட்டின் பொருளாதார ஒழுக்கத்தைச் சீர்குலைக்கும் நடவடிக்கைகளுக்கு வழிவகுக்கும் விதத்தில் அமைந்துள்ளது என்று அஞ்சப்படுகின்றது.

பொருளாதார நிபுணர்கள் எவ்வளவுதான் தீவிர முயற்சி எடுத்தாலும் நாடு பொருளாதார நெருக்கடியில் இருந்து மீளுவதற்கு அரசியல்வாதிகள் விடமாட்டார்கள் என்பது நிச்சயம்.

# சாதாரண தரத்தில் சித்திபெற்றோருக்கு கல்வி இராஜாங்க அமைச்சர் பாராட்டு!

(பொகவந்தலாவ நிருபர்)

க.பொ.த. சாதாரண தரத்தில் சிறந்த பெறுபேறுகளை பெற்றுப் பெருமை சேர்த்த அனைத்து மாணவர்களுக்கும் பாராட்டு தெரிவித்துள்ளார் கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமார்.

இந்த மாதம் முதலாம் திகதி கல்வி அமைச்சால் வெளியிடப்பட்ட க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளை பெற்று நாட்டுக்குப் பெருமை சேர்த்து தந்த அனைத்து மாணவர்களுக்கும் கல்வி இராஜாங்க அமைச்சர் என்ற வகையில் தாம் பாராட்டுக்களை தெரிவித்து கொள்வதாக கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமார் தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில்அவர் இதனை தெரிவித்துள்ளார்.

கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமார் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது–

2022 ஆம் ஆண்டுக்கான கல்வி பொதுத் தராதர பரீட்சையில் சித்தி பெற்று 72.7சதவீதமான மாணவர்கள் உயர் தரத்துக்குத் தகுதி பெற்றுள்ளனர்.

அதேநேரம் 13 ஆயிரத்து 588 மாணவர்கள் கல்வி பொதுத் தர சாதாரண தர பரீட்சையில் 9 ஏ சித்திகளைப் பெற்றுள்ளனர்.

மலையக பெருந்தோட்ட பகுதிகளில் உள்ள பாடசாலைகளில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களும் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுப் பாடசாலைகளுக்குப் பெருமை தேடிக் கொடுத்துள்ளனர்.–என்றுள்ளது.



# மாற்றுத் திறனாளிகள் தின நிகழ்வுகள் திருகோணமலை மாவட்ட செயலகத்தில்

(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை மாவட்ட செயலகம் மற்றும் சமூக சேவைகள் பிரிவின் ஏற்பாட்டில் மாற்றுத் திறனாளிகள் தின நிகழ்வுகள் நேற்று (03) மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றன.

திருகோணமலை மாவட்டத்திலுள்ள 11 பிரதேச செயலர் பிரிவுகளிலும் உள்ள மாற்றுத் திறனாளிகள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

நேபாளத்தின், காத்மண்ட் நகரில் அண்மையில் நடைபெற்ற, மாற்றுத் திறனாளிகளுக்கான சர்வதேச சக்கர நாற்காலி கடினப் பந்து துடுப்பாட்ட இறுதிப் போட்டியில், இலங்கை அணியில் திருகோணமலை மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்திய டபிள்யூ.பியந்த,



திருகோணமலை மாவட்ட அரச அதிபர் சமிந்த ஹெட்டியாராச்சியால் கௌரவிக்கப்பட்டார். அவருக்கான விளையாட்டு உபகர ணங்களும் வழங்கப்பட்டன.

நிகழ்வில் கலந்து கொண்ட மாற்றுத் திறனாளிகள் அனைவருக்கும் அன்பளிப்புக்களும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் திருகோணமலை மாவட்ட மேலதிக அரச அதிபர் (காணி) எஸ்.சுதாகரன், நிர்வாக உத்தியோகத்தர் எஸ்.ஆர்.கே.எஸ்.குருகுலசூரிய, பிரதம முகாமைத்துவ உத்தியோகத்தர், சமூக சேவைகள் மாவட்ட இணைப்பாளர் த. பிரணவன் மற்றும் பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



# சுற்றுப் புறச் சூழலைப் பாதுகாப்பது தொடர்பான செயலமர்வு மட்டுவில்!

(பழுவூரான்)

இயற்கையைப் பாதுகாப்பதன் நிமித்தம் சுற்றுச் சூழல் பற்றிய அறிவையும் விழிப்புணர்வையும் இளையோர் மத்தியில் ஏற்படுத்தும் வகையிலான செயலமர்வு மட்டக்களப்பு வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை (03) இடம்பெற்றது.

இளையோர் அணியாகச் செயற்படும் தமிழ், முஸ்லிம் சமூகங்களைச் சேர்ந்த 30 இளைஞர், யுவதிகள் செயற்பாட்டுச் செயலமர்வில் பங்கு பற்றினர்.

செயலமர்வின் நிறைவில் இயற்கையைப் பேணும் வகையில் 03 கிராமங்களிலுள்ள பொது இடங்களில் பயன்தரும் மரங்கள் செயற்பாட்டு இளைஞர் அணியினரால் நட்டு வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் சேர்க்கிள் இளம் பெண்கள் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் அஜானி காசிநாதர், விவசாய அமைச்சின் விவசாய நவீனமயமாக்கல் திட்டப் பிரிவின் அதிகாரி ஆர். பேரரங்கன், சேர்க்கிள் இளம் பெண்கள் அமைப்பின் வெளிக்கள இணைப்பாளர் வி. அனுஷியா ஆகியோர் கலந்து கொண்டனர்.

# கல்முனை மாநகர வேலைத் திட்டங்களில் அரசியல் தலையீடு எதுவும் கிடையாது

## தவறான பரப்புரை செய்வோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்கிறார் ஆணையாளர் அஸ்மி

(ஏ.எஸ்.மௌலானா)

கல்முனை மாநகர சபையின் வேலைத் திட்டங்களில் எந்தவொரு அரசியல் தலையீடும் கிடையாது என்று மாநகர ஆணையாளர் ஏ.எல். எம்.அஸ்மி தெரிவித்துள்ளார். இது தொடர்பில் தவறான பரப்புரைகள் செய்வோர் மீது சட்ட நடவடிக்கை எடுக் கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் –

கல்முனை மாநகர பிரதான பஸ் தரிப்பு நிலையத்தில் நீண்ட காலத் தேவையாக இருந்துவரும் நவீன வசதிகள் கொண்ட மலசல கூடத் தொகுதியானது நீர் வழங்கல், தோட்ட உட்கட்ட மைப்பு அபிவிருத்தி அமைச்சின் விரிவு படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீடு மற்றும் மாநகர சபையின் பங்களிப்புடன் தற் போது துரிதமாக நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

தேசிய பத்திரிகையில் திறந்த விலைமனுக் கோரல் செய்யப்பட்டு,



உரிய கேள்வி நடைமுறைகள் பின்பற் றப்பட்டு, இவ்வேலைத் திட்டத்துக்கான ஒப்பந்தக்காரர் தெரிவு செய்யப்பட்டி ருந்தார்.

மாநகர சபையால் இவ்வாறான வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்படு கின்றபோது சுயாதீனமாகவும் வெளிப் படைத் தன்மையுடனுமே அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப் படுகின்றன. இதில் எவ்வித அரசியல் தலையீடுகளும் இடம்பெறுவதில்லை என்பதை பொது மக்களுக்கு உறுதியாக தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நிலையில் மேற்படி மலசல கூடத் தொகுதி நிர்மாணம் உள்ளிட்ட வேலைத் திட்டங்கள் மற்றும் நிர்வாக விடயங்களில் சிலர் விசமத்தனமானதும் உண்மைக்குப் புறம்பானதுமான தகவல்களைச் சமூக வலைத் தளங்க ளில் பரப்பி வருகின்றமை தொடர்பாக எனது அவதானத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

இவ்வாறான செயற்பாடுகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படுமானால் அவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

கல்முனை மாநகர சபையின் சேவைகள் மற்றும் வேலைத் திட்டங்கள் உள்ளிட்ட எந்த விடயமாயினும் உண்மையான தகவல்களை அறிய விரும்புவோர் அலுவலக நேரங்களில் நேரடியாக வருகை தந்தோ அல்லது தொலைபேசி மூலமாகவோ அவற்றைப் பெற்றுக் கொள்ள முடியும்.– என்றார்.




# சாய்ந்தமருது வர்த்தகர்கள் இருவருக்கு இந்தியாவில் வர்த்தக முகாமை விருது!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

இந்தியா, தமிழ்நாடு, திருச்சி பிரீஸ் ரெசிடென்சியில் இடம்பெற்ற சிறந்த வர்த்தக முகாமைத்துவ பணிப்பாளர்க ளுக்கான ஆசிய விருதை இலங்கை, சாய்ந்தமருதைச் சேர்ந்த இரண்டு வர்த்தக பிரமுகர்கள் பெற்றுள்ளனர்.

சாய்ந்தமருதை சேர்ந்த அப்துல் அஸீஸ் அஸ்றப் அலி மற்றும் அப்துல் கரீம் முஹம்மட் ஜலீல் ஆகிய இளம் வர்த்தகர்களே இந்த விருது பெற்றுள் ளனர்.

Asia Best Marketing Businessman of the year 2023 award இவ்வாறு கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# புதிய நியமனம் வழங்கல்

(அஸ்ஹர் ஆதம்)

கிழக்கு மாகாண கால் நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் மாகாண பணிப்பாளராக எம்.ஏ.நதீர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவருக்கான நியமனக் கடிதத்தைக் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் நேற்று முன் தினம் வழங் கினார்.



# அம்பாறையிலுள்ள வைத்தியசாலைகளின் குறைபாடுகளை நிவர்த்தி செய்ய வேண்டும்!

## நாடாளுமன்ற உறுப்பினர் பைசல் காசிம் கோரிக்கை

(கே. எ. ஹமீட் )

அம்பாறை மாவட்டத்தில் இருக்கும் அதிகமான மாகாண வைத்தியசாலைகளுக்கு போதுமான வசதிகள் இன்மையால் அங்கு முறையான சிகிச்சை இடம்பெறுவதில்லை. அதனால் மத்திய அரசு அந்த வைத்தியசாலைகளுக்குப் போதுமான நிதியை வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.


இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் பைசல் காசிம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற 2024 வருடத்துக்கான வரவு - செலவுத் திட்டத்தில் சுகாதார அமைச்சுக்கான ஒதுக்கீட்டு சட்ட மூலம் மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போது இவ்வாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

அம்பாறை மாவட்டத்தில் பொத்துவில், கல்முனை மற்றும் சம்மாந்துறை ஆகிய தொகுதிகளில் சுமார் 5 லட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் வாழ்ந்து வருகின்றனர்.

இங்கு மத்திய அரசுக்கு கீழ் 3 வைத்தியசாலைகளும் கல்முனை பிராந்திய சுகாதார சேவை திணைக்களத்தின் கீழ் 26 வைத்தியசாலைகளும்



4 ஆதார வைத்தியசாலைகளும் இருக்கின்றன.

இந்த வைத்தியசாலைகளில் மருந்துத் தட்டுப்பாடு, வைத்தியர் தட்டுப்பாடு, உபகரணத் தட்டுப்பாடு இருந்து வருகிறது. இந்தத் தேவைப்பாடுகளை பெற்றுக் கொள்வது பெரும் சவாலுக்கு உரியதாகவே இருந்து வருகிறது. அதனால் இத்தனை வைத்தியசாலைகள் இருந்தும் அங்கு முறையான சிகிச்சை இடம் பெறுகிறதா என்பது கேள்விக் குறியாகவே இருக்கிறது.

நான் சுகாதாரா இராஜாங்க அமைச்சராக இருந்தபோதும் சீன அரசின் உதவியுடன் 13 வைத்தியசாலைகளை அமைத்தோம். அதில் சம்மாந்துறை மற்றும் பொத்துவில் பிரதேசத்தில் இரண்டு வைத்தியசாலைகளை அமைத்தோம். இந்த இரண்டு வைத்தியசாலைகளிலும் சுமார் 80 வீத பணிகள் முடிவடைந்துள்ளன.

ஆனால் 4 வருடங்களாகியும் இந்த வைத்தியசாலைகளின் பணிகள் பூர்த்தி செய்யாததால் இன்னும் திறக்கப்படாமல் உள்ளன. அதனால் இந்த வைத்தியசாலைகளின் பணிகளைப் பூர்த்தி செய்து விரைவாக இதனைத் திறந்து வைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அத்துடன் மாகாண வைத்தியசாலைகளுக்குப் போதுமான நிதி வழங்கப்படாமல் இருப்பதால் அதிகமான வைத்தியசாலைகள் பாதிக்கப்பட்டுள்ளன. முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன சுகாதார அமைச்சராக இருக்கும் போது இது தொடர்பாகக் கவனம் செலுத்தி மத்திய அரசின் நிதியில் இருந்து மாகாண வைத்தியசாலைகளுக்கு உதவி செய்ய நடவடிக்கை எடுத்து வந்தார்.

ஆனால் தற்போது இந்த நடவடிக்கை இடம் பெறுவதில்லை. அதனால் இந்த நடவடிக்கையை மீள ஆரம்பித்து மாகாண வைத்தியசாலைகளது தேவைகளை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்.-என்றார்.

# ஓய்வு நிலையில் பாராட்டு!





(எம். எப். நவாஸ் )

அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் சுமார் 27 வருடங்கள் சமுர்த்தி உத்தியோகத்தர்களாக கடமையாற்றி ஓய்வு பெற்றுச் சென்றுள்ள எம். எம். எம். அஸ்ஹர், ஏ. எல். எம். பஷீர், ஏ. எம். நிபாயா ஆகியோருக்கான பிரியாவிடை



வைபவம் பிரதேச செயலக கேட்போர் கூட்டத்தில் தலைமைப்பீட முகாமையாளர் ஏ. எம். ஹமீட் தலைமையில் (29) இடம்பெற்றது.

இதில் பிரதம அதிதியாக அட்டாளைச்சேனை பிரதேச செயலர் எம். ஏ. சி. அகமது ஷாபிர், மற்றும் ஏனைய அதிதிகளாக சமுர்த்தி முகாமைத்துவ பணிப்பாளர் ரீ. பரமானந்தம், கருத்திட்ட முகாமையாளர் எஸ். எல். அஸீஸ், வங்கி முகாமையாளர் ஐ.யூ. நபிஷா மற்றும் ஏனைய உத்தியோகத்தர்கள், பெற்றோர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

ஓய்வு பெற்றுச் சென்ற அந்த உத்தியோகத்தர்கள் நினைவுச் சின்னம் வழங்கிப் பொன்னாடை போர்த்துக் கௌரவிக்கப்பட்டனர்.



# கொழும்பில் நடந்த பதுமம் -2023 நிகழ்வு

கொழும்பு சைவ மங்கையர் வித்தியாலயத்தின் இந்து மன்றம்,தமிழ் இலக்கிய மன்றம், நுண்கலை மன்றம் ஆகியன இணைந்து நடத்திய பதுமம் -2023 என்ற நிகழ்ச்சி அண்மையில் கொழும்பில் இடம்பெற்றது.

கொழும்பு நெலும் பொக்குண மண்டபத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. இங்கு சைவ மங்கையர் வித்தியாலய பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகள் மேடையை அலங்கரித்திருந்தன.

பதுமம் -2023 ஆரம்ப நிகழ்வில் பொன்னியின் செல்வன்- 2 படத்தின் பாடலான "வீரா ராஜா வீரா" பாடலை சைவ மங்கையர் வித்தியாலய மாணவிகள் வயலின், வீணை முதலான பாரம்பரிய இசைக் கருவிகள் சகிதம் பாடினர். இது அனைவரது கவனத்தையும் ஈர்த்திருந்தனர்.

இந்த இசை நிகழ்ச்சி சைவ மங்கையர் வித்தியாலய ஆசிரியர் நிவாஸினி சக்திவேல் நெறியாள்கையில் இடம்பெற்றது.



# தமிழ்க் கலாசார விழிமியங்களுக்கு மதிப்பளித்த மொனராகலை நிகழ்வு





(அஸ்ஹர் இப்றாஹிம்)

நாட்டில் இனங்களுக்கிடையில் நல்லுறவைப் பேணவும், மற்றைய இனத்தவர்களின் கலை,கலாசார விழிமியங்களை பேணவும் ஸ்ரீ லங்கா யுனைட்ஸ் மொனராகலை மாவட்ட நல்லிணக்க மத்திய நிலையம் ஒழுங்கு செய்திருந்த தமிழ் கலாசார நிகழ்வில் தமிழ், சிங்கள, முஸ்லிம் இளைஞர் யுவதிகள் பங்கேற்றிருந்தனர்.

# பிரித்தானியாவில் குருதிக்கொடை




மாவீரர் தினத்தை முன்னிட்டு நாடு கடந்த அரசால் பிரித்தானியாவில் குருதி நன் கொடை நிகழ்வு நடத்தப்பட்டது.



# பழைய மாணவர் சங்க நிர்வாகம் தெரிவு

(அஸ்ஹர் ஆதம்)

கல்முனை அல் பஹ்ரியா தேசிய பாடசாலையின் எதிர்வரும் 2024, 2025 ஆம் ஆண்டுகளுக்கான பழைய மாணவர் சங்க நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டுள்து.

பாடசாலையின் அதிபரும் பழைய மாணவர் சங்கத்தின் மரபு ரீதியான தலைவராகவும் இருந்து வரும் எம்.எஸ்.எம். பைசால் தலைமையில் இது இடம் பெற்றது.

இங்கு 19 பேர் கொண்ட புதிய நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்டது.

தலைவர் – எம்.எஸ்.எம்.பைசால் – அதிபர், உப தலைவர் – எஸ்.எம்.ஏ. அஸீஸ், பிரதித் தலைவர் – யூ.எல். அரபாத், செயலாளர் – யூ.எல்.எம். ஹாஜா, உப செயலாளர் – கே.எம்.அஸ் ஹர், பொருளாளர் – எஸ்.என்.ஹஸ்மி, உப பொருளாளர் – எஸ்.இஸட்.எம்.சுனுஸ், இணைப்புச் செயலாளர் – பி. ருக்ஸான், கணக்குப் பரி சோதகர் – யூ.கே.லாபிர், ஊடக இணைப்பாளர்கள் – யூ.எல்.ரியால், ஏ.தாரிக்.

பின்வருவோர் நிர்வாக சபை உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப் பட்டனர்.

ஏ.எஸ்.றம்சீர் எஸ்.எம்.ஸீத், ஏ.எல்.எம். ஹனிபா, எஸ்.எல்.தன்சீல், எம்.ஐ.எம்.ஜஹான், ஏ.ஜே.எம். ஆசாத், ஏ.சி.முத்தகீம், எஸ்.எம்.எம்.றிஸ்வான்.





# ‘கிழக்கிலங்கையின் இலக்கியச் செல்நெறி’ தென் கிழக்குப் பல்கலையில் ஆய்வரங்கம்

(எம்.எஸ்.எம்.ஸாகிர், எம்.எஸ். நவாஸ்)

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் தென் கிழக்குப் பல் கலைக்கழகத்தின் மொழித் துறையுடன் இணைந்து ஆய்வரங்க நிகழ்வை நடத்தியுள்ளன.

“இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பின்னரான கிழக்கிலங்கையின் இலக்கியச் செல்நெறி” எனும் தலைப் பில் சனிக்கிழமை (02) தென்கிழக்குப் பல்கலைக்கழக கலை கலாசாரபீட கேட்போர் கூடத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் மாகாணப் பணிப் பாளர் சரவணமுத்து நவநீதன் தலை மையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், ஒலுவில் தென் கிழக்குப் பல்கலைக்கழக கலை கலாசார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எம்.எம். பாஸில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்.

நிகழ்வில் வாழ்நாள் பேராசிரியர் அ. சண்முகதாஸ் ஆய்வரங்கத்தைத் தலைமை வகித்தார்.

தென்கிழக்குப் பல்கலையின் மொழித்துறைப் பேராசிரியர் ஏ.எப்.எம். அஷ்ரப் மொழி பெயர்ப்புத் துறையின் செல்நெறி பற்றியும் அக்கறைப்பற்று வலயக் கல்வித் திணைக்களத்தின் உதவிக் கல்விப் பணிப்பாளர் கலாநிதி ஹனிபா இஸ்மாயில் சிறுகதைத்துறை யின் செல்நெறி பற்றியும் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் தமிழ் கற்கைகள் துறையின் முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி மா.நதிரா பெண் எழுத்துக் களின் செல்நெறி பற்றியும் கொழும்பு கனிமையாளர் மு. மயூரன் இலக்கி யத்தின் நவீன தொழில்நுட்பத்தின் செல்வாக்கு பற்றியும் ஜப்பான் கக்சுயின் பல்கலைக்கழகத்தின் ஓய்வு நிலை ஆய்வுப் பேராசிரியர் மனோன்மணி சண்முகதாஸ் ஆய்வுப் பகிர்வின் நோக்கு பற்றியும் ஆய்வரங்கத்தில் கருத்துக்களை முன்வைத்தனர்.

தென்கிழக்குப் பல்கலையின் மொழித்துறை விரிவுரையாளர் எம். அப்துல் றஸாக் திறனாய்வுத் துறையின் செல்நெறி பற்றியும் கிழக்கு பல் கலையின் தமிழ் கற்கைகள் துறை விரிவுயாளர் கலாநிதி த. மேகராசா கவிதைத் துறையின் செல்நெறி பற்றி யும் தென் கிழக்கு பல்கலைக்கழகத்தின் வருகைதரு விரிவுரையாளர் கலாநிதி எம். சத்தார் பிர்தௌஸ் நாவல் துறை யின் செல்நெறி பற்றியும் நிகழ்வில் கருத்துக்களை முன்வைத்தனர்.

அத்துடன் நிகழ்வில் பேராளர் கருத்துப்பகிர்வும் இடம்பெற்றது.

பாரம்பரிய கலையான சாய்ந்தமருது முஹம்மதியா கலைமன்றத்தின் தலை வர் சிரேஷ்ட அண்ணாவியார் எம்.ஐ அலாவுதீன் தலைமையிலான பொல்லடி எனும் கோலாட்டம் மற்றும் திருக்கோவில் மகேசாஞ்சலி நர்த்தனாலயத்தின் திருமதி தேவமலர் தங்கமாணிக்கம் ஆசிரியர் தலைமையிலான மாணவர்க ளின் கும்மி நடனம் என்பன இடம்பெற் றன.



கிழக்கு மாகாணத்தில் உள்ள புல் மோட்டை தொடக்கம் பொத்துவில் வரை யான பிரதேச செயலகப் பிரிவில் இருந்து 300 இற்கு மேற்பட்ட இலக்கிய ஆர்வ லர்கள், எழுத்தாளர்கள், தென் கிழக்கு பல்கலையில் தமிழ் மொழித் துறையில் விசேட கற்கை நெறியை மேற்கொள்ளும் நூற்றுக்கு மேற்பட்ட பல்கலை மாண வர்கள் உட்பட துறைசார்ந்த அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

முழுநாள் நிகழ்வாக இடம்பெற்ற இந்த நிகழ்வில், இறுதியாக அம்பாறை மாவட்ட கலாசார ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் ஏ.எல். தௌபீக் நன்றியுரை நிகழ்த்தினார்.










**இனப் படுகொலையும் சர்வதேச சட்டங்களும்:**

# மானுட வரலாற்றின் துயரமான அத்தியாயங்கள்!

■ ஐங்கரன் விக்கினேஸ்வரா

'இனப்படுகொலை' (Genocide) என்பது முறைப்படுத்தப்பட்ட மற்றும் விரிவான முறையில் இனவரையறை, நிற பேதமை, மதம் மற்றும் தேசியம் என்ற ஏதாவதொரு வகையில் ஒரு இனத்தை பாகுபடுத்தி, அந்த இனத்தை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அழிப்பது ஆகும்.

இனப்படுகொலைக்கு எதிராக ஐக்கிய நாட்டு அமைப்பின் புதிய சட்டம் 1951 ஆம் ஆண்டு அமுலுக்கு வந்த பின், அதன் அப்போதைய 80 உறுப்பு நாடுகளும் அந்த சட்டத்தின் சரத்துக்களைத் தங்கள் நாட்டு சொந்தச் சட்டத்தில் இணைத்தன. இந்தச் செயலானது, குற்றவாளிகளைப் பரந்தளவில் அடையாளம் காண்பதற்கு உதவி புரிந்தது எனலாம்.

உலகம் முழுவதும் பல நாடுகளிலும் கடந்த 250 ஆண்டுகளில் இனப் படுகொலைகள் என்ற பெயரில் ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள் என ஏராளமானோர் கொல்லப்பட்டுள்ளனர். இந்த எண்ணிக்கை லட்சமோ, கோடியோ அல்ல. பல மில்லியன்களைத் தாண்டுகிறது என்பது தான் உண்மை.

ஓர் இனத்தை அது இருந்த சுவடே தெரியாமல் அழிப்பதாகவும், ஓர் இனத்தின் அல்லது அந்தக் குழுவின் உறுப்பினர்களைக் கொல்வது, குழு உறுப்பினர்களுக்கு உடல் மற்றும் உளரீதியாக மோசமான விளைவுகளை ஏற்படுத்துவதே இனப் படுகொலையாகக் கருதப்படுகிறது. ஓர் இனத்தைச் சேர்ந்த மக்களைக் கொத்துக் கொத்தாகக் கொன்று குவிப்பதுடன், அடுத்த தலை முறை உருவாகவிடாமல் தடுப்பதும் இனப் படுகொலையாகப் பார்க்கப்படுகிறது.

இனப்படுகொலையானது ஆங்கிலத்தில் ஜெனோசைட் (Genocide) என்று அழைக்கப்படுகிறது. இந்த ஜெனோசைட் என்ற வார்த்தையை ரஃபேல் லெம்கின் என்ற போலந்து நாட்டைச் சேர்ந்த யூத வழக்கறிஞர், நாஸி தாக்குதலிலிருந்து தப்பி, அமெரிக்காவில் தஞ்சமடைந்த போது லத்தீன் - கிரேக்க - பிரெஞ்ச் மூலங்களிலிருந்து உருவாக்கினார் என அறியப்படுகிறது.

1933 ஆம் ஆண்டு ஈராக்கில் நடந்த அசீரிய (Assyrian) இனப் படுகொலையானது, ரஃபேல் லெம்கின் நினைவை முதலாம் உலகப் போரின்போது நடந்த ஆர்மீனியப் படுகொலையை நோக்கி நினைவு படுத்துச் சென்றது. எனவே இனப்படுகொலை என்ற காட்டுமிராண்டி செயலுக்கெதிரான சர்வதேச சட்ட வடிவுக்கான ஒரு முன்வரவை அவர் ஸ்பெய்ன் தலைநகர் மாட்ரிட்டில் இருந்த சர்வதேச நாடுகள் கூட்டமைப்பின் (லீக் ஆஃப் நேஷன்ஸ்) சட்ட கவுன்சிலுக்கு அப்போது வழங்கினார்.

உலகில் இனப்படுகொலை என்பதற்கு அனைவரும் ஏற்றுக்கொள்ளும் படியான ஒரு விளக்கத்தை இன்று வரை பெற முடியாததற்கு இந்த அரசியல் பிரச்சினைகளே காரணம் என்றும், விமர்சிக்கப்படுகிறது. மேலும் ஒவ்வொரு நாடும் தனது அரசியல் நலனுக்கேற்ப இந்த விடயத்தில் நடந்து கொள்கின்றன.

ஒரு இனப்படுகொலை நடந்த முடிந்த பிறகு குற்றவாளிகளைத் தண்டிப்பதற்கு சர்வதேச அளவில் சில நாடுகள் நடவடிக்கை எடுக்கின்றன. ஆனால் அந்தப் படுகொலை நடவடிக்கையில் அந்த நாடுகள் ஏன் எதுவுமே செய்வதில்லை என்ற பாரதூரமான விமர்சனம் எப்போதும் உண்டு.

### சர்வதேச குற்றவியல் நீதிமன்றங்கள்

இனப்படுகொலை ஒரு சர்வதேச சட்டத்தின் கீழ் தண்டிக்கப்படும் ஒரு குற்றமாகும். இரண்டாம் உலகப்போர் முடிவடைந்த பிறகு, இனப்படுகொலை என்பது கட்டாயத் தேவையின்படி, ஒரு மாபெரும் சர்வதேச குற்றமாக கருதப்பட்டாலும், அதை விசாரிக்க சர்வதேச குற்றவியல் நீதிமன்றங்கள் இருந்தாலும், சம்பந்தப்பட்ட நாடுகளோ அல்லது வலிமை வாய்ந்த நாடுகளோ ஒத்துழைக்காமல் சட்டத்தாலும், நீதிமன்றத்தாலும் எதுவும் செய்துவிட முடியாது என்பது மட்டும் உண்மை.

ஈரானில் 19 ஆம் நூற்றாண்டில் தோன்றிய பஹாய் (Bahai) என்ற சமயத்தின் நம்பிக்கையாளர்கள் சுமார் 25 ஆயிரம் பேரை அந்த நாட்டு ஷியா இஸ்லாமிய அரசு கொன்று குவித்தது. அவர்களின் சொத்துக்களையும், உரிமைகளையும் பறித்தது. பலரை நாட்டை விட்டு விரட்டியது. இன்றுவரை அந்த நாட்டில் பஹாய்களுக்கு கொடுமைகள் நடந்தவண்ணம் உள்ளன.

தொடரும் துயரமாக முதலாம் உலகப் போர் சமயத்தில் ஆர்மீனியா நிலத்தில் துருக்கியர்களால் லட்சக்கணக்கில் ஆர்மீனியர்கள் கொல்லப்பட்டனர். ஈராக் மற்றும் துருக்கி பிராந்தியத்தின் ஆயிரக் கணக்கான குர்துக்கள் கொல்லப்பட்டனர்.

பின்னர் இரண்டாம் உலகப் போரின் போது, பல லட்சம் யூதர்களை ஹிட்லரின் நாஸிச அரசு படுகொலை செய்தது.

### உலகப் போர்களில் இனப்படுகொலை

முதல் உலகப்போரில் ஜேர்மனியோடு சேர்ந்த துருக்கி தோல்வியடைந்தது. தோல்விக்கு பழிவாங்கும் முகமாக ஆர்மீனியர்கள் மீது மிகவும் கோபமடைந்தது ஓட்டோமன் அரசு.

துருக்கு பேரரசைச் சேர்ந்த ராணுவத்தின் மூலம் ஆர்மேனியர்கள் துரோகிகள் என அவர்கள் குற்றஞ்சாட்டப்பட்டு, கைது செய்து பலர் கொல்லப்பட்டனர். 1915 இல் துருக்கி ஓட்டோமன் பேரரசு, முதல் உலகப்போர் தொடங்கும் சமயத்தில் தங்களது இருப்பினைத் தக்கவைத்துக்கொள்ள அந்தப் போரில் ஈடுபட முடிவு செய்தது.

ஏற்கெனவே இழந்த செல்வாக்கை மீட்க இது உதவும் என்று நம்பி அவர்கள் அதில் இறங்கினர். முதல் உலகப் போரில் ஜேர்மனியோடு இணைந்து களம் கண்டது ஓட்டோமன் அரசு.

துருக்கியின் உள்நாட்டில் அதிகாரச் சண்டை அந்த நாட்டுக்கு மற்றொரு தலைவலியாக அமைந்தது. இந்த நிலையில் நிறைய புரட்சி இயக்கங்கள், நாடு முழுவதும் பலவாறாகத் தோன்றின. இதற்கெல்லாம் காரணம் யார் என்று ஆராய்ந்தபோது, ஆர்மீனியர்கள்தான் என்று குற்றஞ்சாட்டி அவர்களை படுகொலை செய்தது.

இவ்வாறாக 1915 முதல் 1918 ஆம் ஆண்டுவரை ஓட்டோமன் அரசால் 5 முதல் 12 லட்சம் ஆர்மீனியர்கள் கொல்லப்பட்டனர்.

### ஹிட்லரின் யூத படுகொலை

யூதர்களை கொடுமைப்படுத்துவது, துன்புறுத்துவது, கொலை செய்வது என இரண்டாம் உலகப்போர் நடந்துகொண்டிருந்த சூழலில், தொடர்ந்து கொண்டுதான்

(14 ஆம் பக்கம் பார்க்க)

# மானுட வரலாற்றின் துயரமான அத்தியாயங்கள்!

(13 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இருந்தது. உண்மையில் ஹிட்லரால் ஜேர்மனியில் யூதர்கள் கொடூரமாக திட்டமிட்டுப் படுகொலை செய்யப்பட்டனர்.

யூதர்கள் நெருக்கடியான பகுதிகளில் அடைத்து வைக்கப்பட்டு, பின்னர் அங்கிருந்து சரக்குத் தொடர் வண்டிகள் மூலம் நூற்றுக் கணக்கான மைல்கள் தொலைவில் இருந்த வதை முகாம்க ளுக்குக் கொண்டு செல்லப்பட்டனர். பலர் வழியிலேயே இறந்து போயினர். எஞ்சியோர் நச்சுவாயு அறைகளுள் அடைத்துக் கொல்லப்பட்டனர்.

இரண்டு வகையான முகாம்களை நாஜிக்கள் அமைத்தனர். ஒன்று, சாதா ரண கைதி முகாம். இதில் கைதிகளை அடிமைபோல் நடத்தி, அவர்களை கசக்கிப் பிழிந்து வேலை வாங்குவார்கள். தேவையில்லாமல் கொல்லமாட்டார்கள். இன்னொன்று வதை முகாம்கள், இவை யூதர்களை கொல்வதற்காகவே உரு வாக்கப்பட்டதாகும்.

## கம்போடியாவில் பொல் பொட் அரசின் கோரம்

கம்போடியாவில் உணவு உற்பத்தி யில் தன்னிறைவு பெற வேண்டும் என்று எண்ணினார் ஆட்சியேறிய பொல் பொட் ( Pol Pot ) அரசு. அனைவரும் விவ சாயம் செய்ய வேண்டும் எனக் கட்டாயப் படுத்தப்பட்டனர். குறிப்பாக 1975-1979 காலகட்டத்தில், பொது மக்களின் சொத் துக்கள் அனைத்தும் பொதுவுடைமை ஆக்கப்பட்டு, பொல் பொட் அரசால் கைப்பற்றப்பட்டது.

1953 ஆம் ஆண்டு கம்போடியா பிரான்ஸிடமிருந்து விடுதலை அடைந்த பின், சிஹானக் கம்போடியா அரசனாகப் பொறுப்பேற்றார். கம்போடியன் கம் யூனிஸ்ட் கட்சியின் (கிமேர் ரூஜ்) தலை வர் ஆன பொல் பொட் சிஹானக்கை பதவியிறக்கி, பின்னர் 1976 இல் பொல் பொட் பிரதமராகப் பதவியேற்றார். வணிகம், மருத்துவம், தொழில்துறை எனப் பல துறைகள் எல்லாம் நிறுத் தப்பட்டன.

ஆட்சியாளர்களை எதிர்த்து போரா டிய மக்களைச் சிறையிலடைத்து சித்திரவதை செய்தும் பசி, பட்டினி மற்றும் சட்டவிரோதமான முறையிலும் படுகொலைகள் அரங்கேற்றப்பட்டன.

குருட்டுத்தனமான கொள்கையும், செயல்முறைப்படுத்தாத திறனும் மக்களை வாட்டின. சுமார் 20 லட்சம் மக்கள் இம்முறையில் கொல்லப்பட்டனர்.

## தொடரும் படுகொலைகள்

1975 இல் கிழக்குத் திமோர் மீது இந்தோனேஷியா எடுத்த படையெடுப்பு இனப் படுகொலைகளாக முன்வைக் கின்றனர். அமெரிக்க செவ்விந்தி யர்கள், பாலஸ்தீனியர்கள், காங்கோ, சோமாலியா, கொசாவா என உலக நாடுகளின் வரலாற்றில் 'இனப் படு கொலைகள்' தொடர்ந்து நடந்து கொண்டுதான் இருக்கின்றன என்பது நிதர்சனம்.

பரவலாக பல நூற்றாண்டுகளில் நடந்த மத மோதல்கள் ஏராளமான மக் கள் தேவையின்றி அழிவதற்கு காரண மாயின. ஒரு மதம், தான் பரவ வேண்டும்



என்பதற்காக இன்னொரு மதத்தை அழித்தது.

ஆயினும் உலகில் தோன்றிய எத்தனையோ மறைநெறிகள் இந்தக் கொடுமையை தடுப்பதற்கான போத னைகளை கூறிய போதிலும், மனிதர்கள் தொடர்ந்து அதை மறந்துவிடுகிறார்கள் என்பதே நிஜமாகும்.

## ருவாண்டா இனப்படுகொலை (1994)

ஜேர்மனியின் காலனியாதிக்கத்தின் கீழ் இருந்த நாடு ருவாண்டா, புருண்டி. இங்கு டூட்சி, ஹூட்டு என்ற இரண்டு இன குழுக்கள் வாழ்ந்து வந்தனர். பல நூற்றாண்டுகளாக டூட்சி இன மக்கள் ஆண்டுவர, பல நூற்றாண்டு காத்திருப் புக்குப் பிறகு,1972 இல் புருண்டியில் ஹூட்டுகளின் புரட்சி தொடங்கியது.

1994 ஏப்ரல் 7 அன்று ஹூட்டு இன மக்கள், டூட்சி இனத்தவரை கொல்லத் திட்ட மிட்டனர். பெரியவர், சிறியவர் எனப் பாரபட்சம் இல்லாமல் அனை வரையும் கொன்று குவித்தனர் ஹூட்டு இனத்தினர். ஒரு லட்சத்துக்கும் மேற்பட் டோர் கொல்லப்பட்டனர். நான்கு லட்சத் துக்கும் மேற்பட்டோர் அகதிகளாக அண்டை நாடுகளில் தஞ்சமடைந்தனர். அத்துடன் ஆயிரக் கணக்கானோர் முடமாக்கப்பட்ட னர் என்பது குறிப்பிடத்தக்கது.

## போஸ்னியா இனப்படுகொலை

பால்க்கன் பிராந்தியத்தில் யூகோஸ் லாவியாவிடம் இருந்து பிரிந்த நாடு போஸ்னியா ஆகும். 1990களில் புதி தாக உருவாக்கப்பட்ட தேசம் என்பதால் நாடு முழுவதும் குழப்பம் ஏற்பட்டது. அங்கே போஸ்னியர்கள், செர்பியர்கள், குரேஷியர்கள் என மூன்று வகையான இன மக்கள் வாழ்ந்து வந்தனர். குரே ஷிய அதிபருக்கும், போஸ்னிய அதிப ருக்கும் ஓர் ஒப்பந்தத்தில் முரண்பாடு ஏற்பட, அங்கிருந்து தொடங்கியது இந்தப் பிரச்சினை.

போஸ்னியாவில் 1993 ஆம் ஆண் டில் 2000 பேர் கொலை செய்யப் பட்டனர். 64 இஸ்லாமியர்களைக் கைது செய்து பேருந்தில் அடைத்து, தீவைத்துக் கொழுத்தினர். இதில் 56 பேர் இறந்தனர்.

செர்பிய ராணுவ ஆட்சியில் 1992-1995 காலகட்டத்தில் இரண்டு லட்சம் பேர் கொல்லப்பட்டனர். நான்கு லட்சம் பேர் காணாமல் போனார்கள்.

## டார்ஃபுர் - சூடான் இனப்படுகொலை

ஆப்பிரிக்காவின் சூடானில் உள்ள டார்ஃபுர் மாநிலத்தில் நடைபெற்ற இந்தப் படுகொலை பொருளாதார ரீதியாக முக்கியமானதாகும். சூடானின் வடக்கு மற்றும் தெற்குப் பகுதிகள் சண்டையிட்டுக் கொள்வதையே வழக்கமாகக் கொண் டிருந்தன. இந்த நிலையில் மேற்கு சூடானில் உள்ள டார்ஃபுரில் எண்ணெய் வளம் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

இதனால் வடக்கு மற்றும் தெற்கு பிரச்சினை மேலும் கொழுந்துவிட்டு எரிந்தது. இவ்வாறாக 1972 இல் உள்நாட்டு யுத்தம் முடிந்து, 1983 இல் மீண்டும் துளிர்விட ஆரம்பித்தது.

கிட்டத்தட்ட 20 வருடங்களில் 20 லட்சம் பேர் உயிரிழந்தனர். 40 லட்சம் பேர் வீடுகளை இழந்து அகதிகளாகினர். தென் சூடான் தனி நாடாக ஜூலை 2011இல் அமைதி உடன்படிக்கையில் கையெ முத்திட்டது சூடான் அரசு.

## ஈழத்தில் தமிழர் படுகொலை

ஈழத்தமிழர்கள் மீதான இனப்படு கொலை பெரும் வலியையும், ஆற்றா மையையும் இப்போதும் எங்கள் ஈழமண் துயரங்களுடன் தேக்கி வைத்திருக்கிறது. விடியலுக்கான நீண்ட பயணம் தொடர்கிறது. 1983 ஆம் ஆண்டு 'கறுப்பு ஜூலை' சம்பவம் இன்றளவும் நீங்கா வடுவாக தமிழர்கள் மத்தியில் நிலவுகி றது. கண்ணில்பட்ட எல்லாரையும் கொன்று, பெண்கள் பலரும் பாலியல் சித்ரவதைக்கு உள்ளாக்கப்பட்டதுடன், படு கொலையும் செய்யப்பட்டனர்.

1958, 1977, 1983 ஆம் ஆண்டுக ளில் நடந்த இனக்கலவரங்கள் இவற்றில் குறிப்பிடத்தக்கவை. ஈழப் போராட்டம் ஆரம்பித்த பின்பு வானூர்திகளில் இருந்து கண்மூடித்தனமாக குண்டு வீசுதல், ஏவுகணை வீச்சு, நேரடித் தாக்குதல் போன்றவற்றின் மூலம் இது வரை சுமார் லட்சத்துக்கும் அதிகமா னோர் கொல்லப்பட்டுள்ளனர். லட்சக் கணக்கானோர் அகதிகளாயினர்.

இன்னமும் தொடரும் துயரமாக, அரசியல் மற்றும் பொருளாதார தேவை கள் மட்டுமே மனிதர்கள் அழிய காரண மாவதில்லை. பல சமயங்களில் அதை விட சித்தாந்தம், கொள்கை, இனப் பெருமை போன்ற விஷயங்கள் பெரும் பாலான மனித அழிவுக்கு காரணமா கின்றன. வரலாற்றில் மனித இனம் தோன்றி யதில் இருந்து ஒரு இனம் மற்றொரு இனத்தை அழித்து, தனது தேவைகளுக்காக அவர்களின் சொத்துக் களை கவர்ந்து, அவர்களின் இடத்தை ஆக் கிரமித்து வாழ்ந்து வருவதானது இன்று வரையில் ஏதாவது ஒரு வடிவத்தில் தொடர்ந்து வருகிறது. மானுட தர்மம் நீதியற்று போயுள்ளதையே வர லாற்றின் துயரமாக பார்க்கலாம்.

# மிக்ஜாம் புயலின் வேகம் அதிகரிப்பு: இந்திய வானிலை மையம் எச்சரிக்கை



மிக்ஜாம் புயல் நாளை முற்பகல் தெற்கு ஆந்திரா கடற்கரையை நெல்லூருக்கும் மசூலிப்பட்டினத்திற்கும் இடையே தீவிர புயலாகக் கடக்கக்கூடும் என இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மிக்ஜாம் புயலின் அறிகுறிகள் தமிழ்நாட்டில் நான்கு மாவட்டங்களில் நேற்று மாலை முதல் தென்பட ஆரம்பித்துள்ளதாக இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இந்த நிலையில் பெரும்பாலான பகுதிகளில் தொடர் கனமழை காரணமாக போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், காற்றின் வேகம் அதிகரித்து வருவதால், அனைத்து விமானங்களும் தற்காலிகமாக ரத்து செய்யப்பட்டுள்ளதுடன் தொடர்கனமழை காரணமாக சென்னை மாவட்டத்தில் உள்ள அனைத்து நீதிமன்றங்களுக்கும் இன்று விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், மக்கள் வீடுகளை விட்டு வெளியேற வேண்டாம் என வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, புயல், மழை காரணமாக சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு ஆகிய 4 மாவட்டங்களுக்கும் இன்று பொது விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக தலைமைச் செயலர் சிவ்தாஸ் மீனா வெளியிட்டுள்ள அரசாணையில்,

'மிக்ஜாம்' புயல் காரணமாக சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு மாவட்டங்களில் அதிகனமழை மற்றும் பலத்த காற்றுவீசக்கூடும். எனவே, இந்த 4 மாவட்டங்களுக்கும் செலாவணி முறிச்சட்டத்தின் அடிப்படையில், சிறப்பு நிகழ்வாக இன்று பொது விடுமுறை விடப்படுகிறது.

இதனால், சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு மாவட்டங்களில் உள்ள அனைத்து பொதுத்துறை நிறுவனங்கள், குறிப்பாக கழகங்கள், வாரியங்கள், வங்கிகள், நிதி நிறுவனங்கள் உள்ளிட்ட அனைத்து அரசு அலுவலகங்களும் இன்று மூடப்பட்டிருக்கும்.

அதே நேரம், அத்தியாவசிய சேவைகளான காவல் துறை, தீயணைப்பு, உள்ளாட்சி அமைப்புகள், பால், குடிநீர், மின்சார விநியோகம், மருத்துவமனை, மருந்தகம், உணவகம், போக்குவரத்து, பெட்ரோல் பங்க் ஆகியவையும், பேரிடர் மீட்பு தொடர்பான அலுவலகங்கள், நிவாரணம் மற்றும் மீட்பு பணிகள் வழக்கம்போல செயல்படும் என்று குறிப்பிட்டுள்ளார்.

# சென்னை, புறநகர் பகுதிகளில் கடும் வெள்ள அபாய எச்சரிக்கை





மிக்ஜாம் புயலால் சென்னையில் கடந்த 12 மணி நேரத்துக்கும் மேலாக கனமழை பெய்துள்ளதால், கடும் வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நிலைமை மேலும் மோசமடைந்தால் அதை சமாளிப்பதற்காக தேசிய பேரிடர் மீட்புக் குழுக்களை அதிக அளவில் அனுப்பி வைக்க வேண்டும் என்று மத்திய அரசை கேட்டுக் கொள்வதாக பாமக நிறுவனர் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“வங்கக்கடலில் உருவாகியுள்ள மிக்ஜம் புயல் வேகமாக கரையை நெருங்கி வரும் நிலையில், சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் கடந்த 12 மணி நேரத்திற்கும் மேலாக பெய்து வரும் தொடர்மழையால் சென்னை வெள்ளக்காடாக மாறியிருக்கிறது.

சென்னையின் பெரும்பான்மையான பகுதிகளில் பல அடி உயரத்திற்கு வெள்ள நீர் தேங்கி நிற்கிறது. அடுக்கு மாடி குடியிருப்புகளுக்குள்ளும் மழை நீர் நுழையத் தொடங்கியுள்ளது. தொடர்ந்து மழை பெய்து வரும் நிலையில், பாதிப்புகளை தடுப்பதோ, குறைப்பதோ சாத்தியமல்ல. பல இடங்களில் மரங்கள் சாய்ந்துள்ளன. போக்குவரத்து தடைபட்டிருக்கிறது. அனைத்து பகுதிகளிலும் மழை நீரை வடியச் செய்யும் பணிகளில் மாநகராட்சி பணியாளர்கள் ஈடுபட்டிருக்கும் போதிலும் நிலைமை அவர்களின் கைகளை மீறிச் சென்று கொண்டிருக்கிறது.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நிலைமை மேலும் மோசமடைந்தால் அதை சமாளிப்பதற்காக தேசிய பேரிடர் மீட்புக் குழுக்களை அதிக அளவில் அனுப்பி வைக்க வேண்டும் என்று மத்திய அரசை கேட்டுக் கொள்கிறேன்” என்று ராமதாஸ் குறிப்பிட்டுள்ளார்.

# அமெரிக்க போர்க் கப்பல் மீது ஆளில்லா விமான தாக்குதல்!

## - செங்கடலில் பதற்றம்



மத்திய கிழக்குப் பகுதியில் பதற்றமான சூழல் நிலவி வருகின்ற நிலையில் செங்கடல் பகுதியில் சென்றுகொண்டிருந்த அமெரிக்க போர்க் கப்பல் மீது ஆளில்லா விமானம் மூலம் நடத்தப்பட்ட தாக்குதல்கள் தற்போது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

நேற்றைய தினம் இடம்பெற்ற இந்தத் தாக்குதல் சுமார் ஐந்து மணி நேரம் வரை தொடர்ந்து நடந்ததாகவும் அமெரிக்க பாதுகாப்புத் துறையான பென்டகன் தெரிவித்துள்ளது.

இஸ்ரேல் - ஹமாஸ் இடையே நிலவி வரும் போர் காரணமாக அங்கு அமைதியற்ற சூழல் காணப்பட்ட நிலையில் அமெரிக்கப் போர்க்கப்பல் மீது நடத்தப்பட்ட தாக்குதல் அங்கு பதற்றமான சூழலை உருவாக்கியுள்ளது.

இது தொடர்பாக பென்டகன் தரப்பு மேலும் தெரிவிக்கையில்,

“அமெரிக்கப் போர்க்கப்பல் மாத்திரமல்லாது செங்கடலில் உள்ள பல வணிகக் கப்பல்கள் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

அமெரிக்கப் போர்க்கப்பல் மீது குறைந்தது இரண்டு ட்ரோன்கள் மூலம் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம்.

ஓமானின் சானா என்ற பகுதியில் இருந்து காலை 10 மணியளவில் தொடங்கிய இந்தத் தாக்குதல் அடுத்த ஐந்து மணி நேரம் வரை நீடித்தது.

ஓமானிலுள்ள ஈரான் ஆதரவு பெற்ற ஹவுதி கிளர்ச்சியாளர்கள் இந்தத் தாக்குதலை நடத்தியிருக்கலாம், ஏனெனில் கடந்த காலங்களிலும் செங்கடல் பகுதியில் இவ்வாறான தாக்குதல்களை இவர்கள் நடத்தியிருப்பது குறிப்பிடத்தக்கது.

அதே போல் காசா பகுதியில் ஹமாஸ் மீது தாக்குதல்களை நடத்தி இஸ்ரேலைக் குறிவைத்தும் ஹவுதி குழு ட்ரோன்கள் மற்றும் ஏவுகணை தாக்குதல்களை நடத்தி வருகின்றது.” என பென்டகன் கூறியுள்ளது.

ஆனால், இது தொடர்பாக ஹவுதி தரப்பில் இருந்து எந்தவொரு விளக்கவும் இதுவரை அளிக்காத நிலையில், விரைவில் இது தொடர்பாக முக்கியமான அறிக்கை ஒன்றை வெளியிட உள்ளதாக ஹவுதி செய்தித் தொடர்பாளர் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இந்தோனேசியாவில் எரிமலை வெடிப்பு: 11 பேர் உயிரிழப்பு, 12 பேர் மாயம்!







இந்தோனேசியாவின் மேற்கு சுமத்ராவில் மராபி எரிமலை வெடித்ததில் 11 பேர் உயிரிழந்துள்ளனர்.

12 பேர் காணாமல் போயுள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

மீண்டும் எரிமலை வெடிக்கும் அபாயம் உள்ளதால் காணாமல் போனவர்களை தேடும் பணிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில், எரிமலை வெடிப்பு ஏற்பட்ட பகுதிகள் அபாய வலயங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, இந்தோனேசியாவில் 1979 ஆம் ஆண்டு ஏற்பட்ட எரிமலை வெடிப்பின் போது 60 பேர் உயிரிழந் திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.